செய்தி வெளியீடு எண்: 295 நாள்: 02.05.2018

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில், அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை திரு மங்கத் ராம் சர்மா இ.ஆ.ப., மற்றும் தொழிலாளர் ஆணையர் முனைவர்.இரா. நந்தகோபால், இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின் பேரில் அனைத்து மாவட்டங்களிலும் தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) தலைமையில் கடைகள், வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் தோட்ட நிறுவனங்களில் தேசிய பண்டிகை விடுமுறை தினமான மே தின சிறப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. தேசிய பண்டிகை விடுமுறை தினங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இரட்டிப்பு சம்பளம் அல்லது மாற்று விடுமுறை அளிக்க வேண்டும். இது தொடர்பான விபரங்களை சம்மந்தப்பட்ட தொழிலாளர் துணை ஆய்வர்/தொழிலாளர் உதவி ஆய்வாளர்களுக்கு ஒரு நாட்களுக்கு முன்பாக தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தகவல் தெரிவிக்காமல் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தியிருந்தால் அந்நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுக்க தொழிலாளர் ஆணையரால் அறிவுறுத்தப்பட்டது.

மே தின விடுமுறையில் தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டது தொடர்பாக 1700 கடைகள் மற்றும் நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு 1040 முரண்பாடுகளும், 1333 உணவு நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு 980 முரண்பாடுகளும், 341 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு 180 முரண்பாடுகளும், 82 தோட்ட நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு 5 முரண்பாடுகளும் தமிழக முழுவதும் கண்டறியப்பட்டது. மேலும், நிறுவனங்கள் மே தின விடுமுறையில் பணிக்கு அமர்த்திய தொழிலாளர்களுக்கு இரட்டிப்பு சம்பளமோ அல்லது சம்பளத்துடன் கூடிய விடுப்போ அளிக்க வேண்டும். தவறினால் தொடர் ஆய்வின் போது முரண்பாடுகள் கண்டறியப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்க அனைத்து ஆய்வாளர்களுக்கு தொழிலாளர் ஆணையரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**